அசல்

7.5.42. வி. சிதம்பரராமலிங்க பிள்ளை

அசல் -1

உ

சிவமயம்.

3/13

1

திருவாவடுதுறை.
7-5-1942.

அன்புள்ள ஐயா,

உபய க்ஷேமம்.

தங்கள் பிதா அவர்கள் பிரிவு தமிழகத்தைத் திடுக்கிடும்படி செய்துவிட்டது. பிறப்புரிமையால் அவர்கள் தங்கட்கும் பிதா முறையினராயினும், 'சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே' என்பது பற்றி நோக்குமிடத்து அவர்கள் தமிழகத்திற்கே தந்தையாராவர். அவர்களது பிரிவு வேறு எவ்வாற்றானும் செம்மைப்படுத்த இயலாதது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நான் தகனம் போய் வந்ததும், என்பால் அவர்களது பெருந்தன்மைகளையெல்லாம் பாராட்டி மிக வருந்தினார்கள். என்பால் தங்கள் பிதா அவர்கள் கொண்டிருந்த அன்பின் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உத்தரவுப்படி சரமகவி சில சொல்லியிருக்கிறேன். அவை தங்கட்கு ஆறுதலளிக்குமென்று கருதுகின்றேன்.

அன்புள்ள
வி. சிதம்பரராமலிங்க பிள்ளை,
ஆதீன வித்துவான்,